நல்லம்பள்ளி யூனியனில்

ரூ.14 லட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மையம்!

எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!!

தர்மபுரி,பிப்.14

நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் ரூபாய் 14 லட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மைய கட்டிடத்தை தர்மபுரி எம்எல்ஏ எஸ் பி வெங்கடேஸ்வரன் திறந்து வைத்தார்

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், மானியத அள்ளி ஊராட்சி, சேசம் பட்டியான்கொட்டாய் கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தில் ரூபாய் 14 இலட்சம் மதிப்பீட்டில், புதிய அங்கன்வாடி மைய கட்டிடம் அமைக்கப்பட்டது. அங்கன்வாடி மைய கட்டிடத்தை பயன்பாட்டிற்கு தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஷ்வரன் ரிப்பன் வெட்டி திறந்து வைத்து, குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் சுகந்திபிரியா, வட்டார ஒருங்கிணைப்பாளர் ஆனந்தன், தொகுதி மேற்பார்வையாளர்கள் சந்திரா, அன்புகரசி, அமுதா, ஜெயா, பாமக மாநில அமைப்பு செயலாளர் ப.சண்முகம், மாநில தேர்தல் பணிக்குழு துணை தலைவர் பெ. பெரியசாமி, மாநில செயற்குழு உறுப்பினர் த.காமராஜ், ஒன்றிய கவுன்சிலர் இராஜீவ் காந்தி, மாவட்ட இளைஞர் சங்க அமைப்பு செயலாளர் சதிஷ், ஊராட்சி மன்ற தலைவர் சரவணன், நிர்வாகிகள் பச்சியப்பன், பொன்மாது, ஜெயகோபி, ஜெகன், கிரி, புஷ்பாகரன், தனசேகர், முருகேசன், சரவணன், சங்கர் மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் உள்ளிட்ட ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

சேலம் மாவட்டம் ஆத்தூரில் உதவித்தொகை உயர்வு கோரி மாற்றுத்திறனாளிகள் சாலை மறியல் செய்தனர்.

ஆத்தூரில்

மாற்றுத்திறனாளிகள் சாலை மறியல்!

220 பேர் கைது!!

ஆத்தூர்,பிப்.14

தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைகளுக்கான சங்கம் சேலம் மாவட்டம் சார்பில் மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை உயர்வு கோரி தொடர் மறியல் போராட்டம் மாவட்ட இணை செயலாளர் எஸ். அழகுவேல் தலைமையில் மாவட்டத் துணைத் தலைவர் கந்தன் முன்னிலையில் ஆத்தூர் பஸ் நிலையம் முன்பு நடைபெற்றது.

இதில் சின்னதுரை ராஜேந்திரன் பாரதி ஜெய்சங்கர் ராஜு வளர்மதி ஆகியோர் கண்டன உரையாற்றினர். 250–க்கும் மேற்பட்டோர் போராட்டத்தில் கலந்து கொண்டனர். இதில் 220 பேர்கைதாகினர். 113அதில் ஆண்கள் பேரும், 151 பெண்களும் ஆவர். கைது செய்யபட்டவர்கள் மாலை 5 மணி அளவில்விடுவிக்கப்பட்டனர்.

வெவ்வேறு சம்பவங்களில்

பெண் உள்பட 3 பேர் தூக்கிட்டு தற்கொலை!

கிருஷ்ணகிரி,பிப்.14

பர்கூர் தாலுகா ஏ.நாகமங்கலத்தை சேர்ந்தவர் மணி. இவரது மனைவி பாரதி (வயது 48). உடல் நலக்குறைவால் அவதிப்பட்ட அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

ஆனாலும் குணமடையவில்லை. இதனால் மனமுடைந்த பாரதி கடந்த 12–ந் தேதி வீட்டில் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இது குறித்து பர்கூர் போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

தேன்கனிக்கோட்டை எம்.ஜி.ஆர். நகரை சேர்ந்தவர் ஆனந்த் (வயது 35). கட்டிட தொழிலாளி. இவரது தம்பி சக்திவேலின் திருமணம் வருகிற 20–ந் தேதி நடைபெறுவதாக இருந்தது.

ஆனால் அவர் ஆனந்த்தை திரும ணத்திற்கு அழைக்கவில்லை. இதில் மனமுடைந்த அனந்த் வீட்டில் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து தேன்கனிக்கோட்டை போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

மத்தூர் அருகே அத்திப்பள்ளத்தை சேர்ந்தவர் வினோத்குமார் (31). ஜெராக்ஸ் கடை நடத்தி வந்தார்.

இவருக்கு மது குடிக்கும் பழக்கம் இருந்தது. இந்த நிலையில் கடன் பிரச்சினையால் அவர் அவதிப்பட்டு வந்தார்.

கடந்த 11&ந் தேதி அவர் மதுகுடித்து விட்டு வீட்டிற்கு வந்தார்.

இது குறித்து மனைவி கேட்டார். இதில் மனமுடைந்த வினோத்குமார் வீட்டில் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இது குறித்து மத்தூர் போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

பென்னாகரம் அருகே

கிராமத்துக்குள் யானைகள் புகுவதை தடுக்க கோரிக்கை!

பென்னாகரம், பிப்.13

வனப்பகுதிகளில் இருந்து யானைகள் விளை நிலங்கள் மற்றும் கிராமப் பகுதிகளில் புகுவதை தடுக்கும் விதமாக, 15 கி.மீ தொலைவிற்கு சோலார் மின் வேலி அமைக்க

வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

கர்நாடகா மற்றும் தமிழக எல்லை பகுதிகளில் கடும் வறட்சி நிலவுவதால், யானைகள் வனப் பகுதிகளை ஓட்டியுள்ள மடம், கூத்தப்பாடி, கே.குள்ளாத்திரம்பட்டி, பூதிப்பட்டி, கொட்டதுண்டு காடு உள்ளிட்ட பகுதிகளில் இடையே, 20–க்கும் மேற்பட்ட இடங்களில் யானைகள் வனப்பகுதியை விட்டு வெளியேறி விளைநிலங்களை சேதப்படுத்தி வருகின்றது.

கடந்த, 18ல், கே.குள்ளாத்திரம்பட்டியில் விவசாய நிலத்தில் காவலில் இருந்து விவசாயியை யானை தாக்கி பலியானார். இந்நிலையில், அப்பகுதியை சுற்றி யானைகள்வனப்பகுதியைவிட்டு வெளியோரமால் இருக்க, 15 கி.மீ.,தொலைவிற்கு சோலார் மின்வேலி அமைக்க வேண்டும் என தொடர்ந்து சுற்றுவட்டார பகுதி மக்கள் பென்னாகரம் வனத்துறையினருக்கு கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்நிலையில், தர்மபுரி மாவட்ட வன அலுவலர் ராஜாங்கம் உத்தரவின் பேரில், வனப்பகுதிகளில் காட்டுத் தீ ஏற்படாமல் இருக்க வனப்பகுதியை ஓட்டியுள்ள பகுதிகளில் பென்னாகரம் ரேஞ்சர் ராஜ்குமார் தலைமையில் விழிப்புணர்வு வழங்கி, பொதுமக்களுக்கு துண்டு பிரசுரம் வழங்கி வருகின்றனர். கூத்தப்பாடியில் பொதுமக்களிடையே காட்டுத்தீ பரவுவதை தடுப்பது குறித்தும், யானைகள் வனப்பகுதிகளை விட்டு வெளியேறுவது பற்றி பொதுமக்களிடையே எடுத்துரைத்தார். அப்போது, ஒரு கி.மீ., தொலைவிற்கு சோலார் மின் வேலி அமைக்க உள்ளதாக தெரிவித்தனர். அப்பகுதி மக்கள் மேலும் உள்ள பகுதிகளுக்கும் சோலார் மின் வேலி அமைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

குமாரபாளையம்

அரசு கல்லூரியில் நாற்பெரும் விழா!

குமாரபாளையம், பிப், 14

குமாரபாளையம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நாற்பெரும் விழா நடைபெற்றது.

. குமாரபாளையம் அரசு

கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், முத்தமிழ் விழா, விளையாட்டு விழா, கல்லூரி ஆண்டு விழா மற்றும் பேரவை நிறைவு விழா ஆகிய நாற்பெரும் விழா நடைபெற்றது.கல்லூரி முதல்வர் (பொ) சரவணாதேவி தலைமை வகித்தார். கோவை மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குனர் செண்பகலட்சுமி சிறப்பு விருந்தினராக பங்கேற்று .பேசியதாவது:

கல்வியை கெட்டியாக பிடித்துக் கொள்ள வேண்டும். நம் படிப்பு என்றும் நமக்கு கை கொடுக்கும். இந்த வயதில் எண்ணற்ற கவனச் சிதறல்கள் ஏற்படும், அதில் யார் ஒருவரும் மாட்டிக் கொள்ளாமல் மிகவும் சிறந்த மாணவர்களாக இருந்து, அவர்களது எண்ணங்களில் கவனம் செலுத்தி மென்மேலும் படித்து நல்ல முறையில் நம் படிப்பை மேற்கொள்ள வேண்டும். ஒவ்வொரு மாணவர்களும் பொருளாதார தற்சார்பு கொண்டவராக இருக்க வேண்டும். மிகச்சிறந்த சான்றோர்களின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துக்காட்டாக கொள்ள வேண்டும். விளைச்சல் இல்லாத நிலம் பயனில்லாதது போல ஒழுக்கம் இல்லாத கல்வி மாணவர்களுக்கு மதிப்பற்றது.

ஆகவே மாணவர்கள் ஒழுக்கத்துடன் கல்வியை கற்று வாழ்க்கையில் மேன்மை பெற வேண்டும். கல்விதான் உங்கள் வாழ்க்கையை மேம்படுத்தும்.

இவ்வாறு அவர் பேசினார்.

ஓசூர் அரசு பள்ளி மாணவர்களுக்கு இலவச மிதிவண்டி!

ஓசூர், பிப்.14

ஓசூர் ஆர்வி அரசு மேல் நிலைப் பள்ளி முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கும் விழாவுக்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் டாக்டர் வளர்மதி தலைமை வகித்தார். விழாவில் பெற்றோர்ஆசிரியர் கழகத் தலைவர் செந்தில்குமார் அனைவரையும் வரவேற்றார்.

ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ், மாநகர மேயர் எஸ்.ஏ.சத்யா ஆகியோர் விலையில்லா மிதிவண்டிகளை மாணவர்களுக்கு வழங்கினர். இதில் ஆர்வி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு 220 மிதிவண்டிகள், மகளிர் மேல் நிலைப் பள்ளி மாணவிகளுக்கு 57 மிதிவண்டிகள், உருது மேல்நிலைப் பள்ளி மாணவிகளுக்கு 60 மிதிவண்டிகள் வழங்கப்பட்டன.

விழாவில் துணைமேயர் ஆனந்தய்யா, மாநகராட்சி சுகாதாரக் குழுத் தலைவர் மாதேஸ்வரன், பெண்கள் மேல்நிலைப் பள்ளி பெற்றோர்ஆசிரியர் கழகத் தலைவர் எல்லோரா மணி, மாவட்டப் பொருளாளர் சுகுமரன், பகுதி செயலாளர் ராமு, பெற்றோர்ஆசிரியர் கழகத் துணைத் தலைவர் சக்திவேல் ஆகியோர் பங்கேற்றனர்.

இறுதியில் பள்ளியின் பட்டதாரி ஆசிரியர் அம்பேத்கராஜ் நன்றி கூறினார்

ஓசூர் வழியாக கடத்த முயன்ற

208 கிலோ குட்கா காருடன் பறிமுதல்!

டிரைவர் கைது!!

ஓசூர்,பிப்.14

ஓசூர் வழியாக கடத்த முயன்ற 208 கிலோகுட்கா காருடன் பறிமுதல் செய்யப்பட்டது. இது தொடர்பாக கோவை டிரைவர் கைது செய்யப்பட்டார்.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் சிப்காட் போலீசார் ஜூஜூவாடி சோதனைச்சாவடி அருகில் வாகன சோதனையில ஈடுபட்டனர்.

அப்போது பெங்களூருவில் இருந்து வந்த காரை நிறுத்தி சோதனை செய்தனர். இதில் காருக்குள் 208 கிலோ தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் மற்றும் 22 கர்நாடக மாநில மதுபான பாக்கெட்டுகள் இருந்தன. அவற்றையும், காரையும் போலீசார் பறிமுதல் செய்தனர்.

அவற்றின் மொத்த மதிப்பு ரூ.2 லட்சம் ஆகும்.

இதை கடத்தியதாக கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தை சேர்ந்த சுரேந்தர் (30) என்பவரை போலீசார் கைது செய்தனர்.

விசாரணையில் பெங்களூருவில் இருந்து மேட்டுப்பாளையத்திற்கு புகையிலை பொருட்களை கடத்த இருந்தது தெரிய வந்தது.

தொடர்ந்து விசாரணை நடந்த வருகிறது.

பாப்பிரெட்டிப்பட்டி அருகே பொ.மல்லாபுரம் பேரூராட்சியில் சாலை வசதி கேட்டு மறியல் செய்த பொதுமக்கள்.

பாப்பிரெட்டிப்பட்டி அருகே

சாலை வசதி கோரி பொதுமக்கள் மறியல்!

போக்குவரத்து பாதிப்பு!!

பாப்பிரெட்டிப்பட்டி, பிப் 14

தர்மபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி அருகே உள்ள பொ.மல்லாபுரம் பேரூராட்சியில் சாலை வசதி கேட்டு பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

தர்மபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி அருகே உள்ள பொ.மல்லாபுரம் பேரூராட்சியில் 15 வார்டுகள் உள்ளன.

இதில் 15வது வார்டு பகுதியில் 150 க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர்.

இந்த குடியிருப்பு பகுதியில் சிசிரோடு அமைப்பதற்காக கடந்த 4 மாதங்களுக்கு முன்பு 4.50 லட்சம் மதிப்பில் நிதி ஒதுக்கிடு செய்யப்பட்டது. ஆனால் இன்று வரை ரோடு அமைப்பதற்கான வேலைகள் துவங்கப்படாமல் உள்ளது.

இதனால் ரோடு வசதியில்லாத நிலையில் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் பெறும் சிரமத்திற்கு உள்ளாகி வந்தனர். இன்று அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் 50க்கும் மேற்பட்டவர்கள் திரண்டு பொம்மிடி சேலம் ரோட்டில் சாலைமறியலில் ஈடுபட்டனர்.

இதனால் சுமார் 1 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

சாலைமறியலில் ஈடுபட்டவர்களிடம் போலீசார், பேரூராட்சி அதிகாரிகளிடம் பேச்சுவார்தையில் ஈடுபட்டனர்.

மூன்றுநாட்களில் ரோடு அமைக்கும் வேலை துவங்கும் என உறுதியளித்ததின்பேரில் சாலை மறியலை கைவிட்டு கலைந்து சென்றனர்.

பென்னாகரம் பஸ் நிலையம் முன் மாற்றுத்திறனாளிகள் மறியல்!

பென்னாகரம், பிப்.14

தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் பஸ் நிலையம் முன்பு உதவித்தொகையை உயர்த்தி வழங்க கோரி மாற்றுத்திறனாளிகள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழக அரசு தற்போது வருவாய்துறை மூலமாக சாதாரண மாற்றுத்திறனாளிகளுக்கு ஆயிரத்து 500 ரூபாயும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலமாக மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ 2ஆயிரம் வழங்கப்படுகிறது. இந்த உதவித்தொகை தற்போது உள்ள காலகட்டத்தில் விலைவாசி உயர்வால் பற்றாக்குறையாக உள்ளதாக கூறியும், ஆந்திரா உள்பட

மற்ற மாநிலங்களிலும் மாற்றுத்திறனாளிகளின் தன்மைக்கு ஏற்ப உதவித்தொகையை அந்தந்த மாநில அரசுகள் வழங்கி வருவதாகவும், அதே போல் தமிழ்நாட்டிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவித்தொகையை வழங்க வேண்டும் என வலியுறுத்தி பென்னாகரத்தில் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் சங்கம் சார்பில் மாவட்ட தலைவர் தமிழ்ச்செல்வி தலைமையில் பஸ் நிலையநுழைவாயில் முன்பு விழுந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பேருந்து நிலையத்தில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட 50க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகளை பென்னாகரம் போலிசார் கைது செய்து தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைத்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தால் அரை மணி நேரத்திற்கு மேலாக பஸ்கள் வெளியே வர முடியாமல் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் பஸ் நிலையம் முன்பு உதவித்தொகையை உயர்த்தி வழங்க கோரி மாற்றுத்திறனாளிகள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கோபி அருகே

நாயை கடித்த சிறுத்தை!

கோபி பிப். 14

கோபி அடுத்த பங்களாப்புதூர் அருகே புஞ்சை துறையம்பாளையம் கிராமம், மாதையன் கோவில் வீதியை சேர்ந்தவர் வெங்கிடுசாமி. தோட்டத்தில் கால்நடை வளர்த்து வருகிறார். அதிகாலையில் வனப்பகுதியில் இருந்து வெளியேறிய சிறுத்தை, தோட்டத்துக்கு வந்தது. கட்டி வைத்திருந்த வளர்ப்பு நாயை கழுத்து பகுதியில் கடித்துள்ளது. இந்த சத்தம் கேட்டு எழுந்து பார்த்தபோது சிறுத்தை வனப்பகுதிக்குள் ஓடி விட்டது. டி.என்.பாளையம்வனத்துறையினர்தோட்டத்தில் நேற்றுஆய்வில் ஈடுபட்டனர். இதில் சிறுத்தை வந்து சென்றதை உறுதி செய்தனர்.

சிறுத்தையால் கடிபட்டு பலத்த காயமடைந்த சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு சிறப்பு மாவட்ட நீதிமன்றம் எண். II (MACT)
திருச்சிராப்பள்ளி
MCOP. No. 796/2025

ராஜாத்தி. க/பெ. முருகேசன்.
மற்றும் 3 பேர்.
No. 21/23. மனக்கொல்லை.
நெய்வேலி தென்பாதி.
ஒரத்தநாடு. தஞ்சாவூர் DT
..மனுதாரர்கள்

Vs

யுவராஜ் திருமலைசாமி
த/பெ. திருமலைசாமி.
எண் 37. பெரியண்ணன் தெரு.
நாமக்கல் DT
... 1ம் எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர்கள் கடந்த 02.02.2025 அன்று தங்களுக்கு சொந்தமான TN 57 AP 5599 லாரி மோதியதில் முருகேசன் என்பவர் இறந்ததற்கு நஷ்ட ஈடு கோரி மாண்புமிகு நீதிமன்றத்தில் தங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விசாரணையில் உள்ளது. மேற்படி வழக்கில்தாங்கள் ஆஜராக கோரிவருகிற 04.03.2026 அன்று வாய்த்த போடப்பட்டுள்ளது. வருகிற 04.03.2026 மாண்புமிகு நீதிமன்றத்தில் காலை 10.00 மணிக்கு தாங்களோ அல்லது தங்களது வழக்கறிஞரோ நேரில் ஆஜராகி தங்களுக்கு ஆட்சேபணைகள் ஏதும் இருப்பின் தெரிவித்துக்கொள்ளலாம். தவறும் பட்சத்தில் தங்களுக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக வழக்கு தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்

R. RAJKUMAR. B.A.. B.L..
BALASUBRAMANIAN. B.A.. B.L..
ADVOCATES. Trichy-2

கனம் உட்கோட்ட நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர்
திருக்கோவிலூர்
சி.ப.எண். அ/372/2026

மலர். க/பெ. அஞ்சுமுத்து.
பா. கிள்ளனூர் கிராமம்.
உளுந்தூர்பேட்டை வட்டம்.
கள்ளக்குறிச்சி மாவட்டம்.
...மனுதாரர்

/எதிராக/

வருவாய் கோட்டாட்சியர் நிர்வாக நீதிமன்றம் திருக்கோவிலூர்
...எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மனுதாரரின் மகன் பிறப்பு பதிவு செய்ய எவருக்காவது ஆட்சேபனைகள். அ. வெங்கடேசன் த/பெ. அஞ்சுமுத்து. என்பவர் கடந்த 15.06.1997 தேதி அன்று களமருதூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பிறந்தார். அவரது பிறப்பை அறியாமையின் காரணமாகவும். கவனக்குறைவாகபதிவு செய்யாமல் மனுதாரர் விட்டு விட்டனர் . தற்போது மனுதாரரின் மகன் பிறப்புச் சான்று பணி நிமித்தம் தேவை படுவதால் மனுதாரரின் மகன் அ. வெங்கடேசன் த/பெ. அஞ்சுமுத்து. என்பவரின் பிறப்பு பதிவு செய்ய கோரி மனுதாரர். எதிர் மனுதாரர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இந்த மனு எவருக்கேனும் ஆட்சேபனை இருந்தால். இவ்விளம்பரம் செய்த 15 தினங்களுக்குள்ளாக மேற்படி கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி எழுத்து மூலம் தெரிவித்து கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் மனு ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டு பிறப்பிக்கப்படும்.

உத்தரவு
வருவாய் கோட்டாட்சியர்
திருக்கோவிலூர்.

TANEJA AEROSPACE AND AVIATION LIMITED

Regd. Office: Belagondapalli Village, Thally Road, Denkanikottai Taluk, Krishnagiri Dist., Belagondapalli - 635114, Tamil Nadu, India Phone : 91 4347 233 509, Fax : 91 4347 233 414 , E-mail : secretarial@taal.co.in, Website : www.taal.co.in, CIN : L62200TZ1988PLC014460

EXTRACT OF THE STATEMENT OF CONSOLIDATED FINANCIAL RESULTS FOR THE QUARTER AND NINE MONTHS ENDED DECEMBER 31, 2025

(INR in lakh, unless otherwise stated)

Sr. No.	Particulars	Quarter Ended December 31, 2025 (Un-Audited)	Nine Months Ended December 31, 2025 (Un-Audited)	Quarter Ended December 31, 2024 (Un-Audited)
1	Revenue from Operations	1,040.39	2,861.90	897.63
2	Profit before exceptional items and tax	573.68	1,615.61	540.78
3	Profit before tax	557.75	1,599.68	540.78
4	Profit after tax	429.66	1,169.96	439.53
5	Total comprehensive income for the period	423.96	1,164.27	439.53
6	Paid up equity share capital (Face Value Rs. 5 per share)	1,275.03	1,275.03	1,275.03
7	Reserves excluding revaluation reserves	14,122.92	14,122.92	12,707.01
8	Earnings / (Loss) per share (of INR 5/- each) (not annualised):			
	(a) Basic earnings / (loss) per share (INR)	1.68	4.59	1.72
	(b) Diluted earnings / (loss) per share (INR)	1.68	4.59	1.72

EXTRACT OF THE STATEMENT OF STANDALONE FINANCIAL RESULTS FOR THE QUARTER AND NINE MONTHS ENDED DECEMBER 31, 2025

(INR in lakh, unless otherwise stated)

Particulars	Quarter Ended December 31, 2025 (Un-Audited)	Nine Months Ended December 31, 2025 (Un-Audited)	Quarter Ended December 31, 2024 (Un-Audited)
Revenue from Operations	1,040.39	2861.90	24897.36
Profit before exceptional item and tax	573.68	1,615.61	540.79
Profit before tax	557.75	1,599.68	540.79
Profit after tax	429.66	1,169.96	439.54
Total comprehensive income for the period	423.96	1,164.27	439.54

Notes : 1. The un-audited standalone and consolidated financial results have been reviewed by the Audit Committee and approved by the Board of Directors at its meeting held on 13th February 2026. 2. Impact of New Labour Codes Effective 21 November 2025, The Government of India has consolidated multiple existing labour legislations into a unified framework comprising four Labour Codes collectively referred to as the 'New Labour Codes'. Under Ind AS 19, changes to employee benefit plans arising from legislative amendments constitute a plan amendment, requiring recognition of past service cost immediately in the statement of Profit and Loss. The New Labour Codes has resulted in estimated one time increase in provision for employee benefits of the Company of Rs 15.93 Lakh and the same has been recognized as an Exceptional Item in the current reporting period. The Company continues to monitor the finalisation of Central / State Rules and clarifications from the Government on other aspects of the Labour Code and would provide appropriate accounting effect on the basis of such developments as needed. 3. The above is an extract of the detailed format of financial results filed with stock exchange under Regulation 33 of the Securities and Exchange Board of India (Listing Obligations and Disclosure Requirement) Regulation, 2015. The full format for the quarter and nine months ended December 31, 2025 are available on the BSE Limited website (URL: www.bseindia.com) and on company's website (www.taal.co.in). The same can be accessed by scanning the QR code provided below.

Place: Pune
Date : February 13, 2026

For and on behalf of the Board of Directors
Rakesh Duda
Managing Director